நூ.ப.
0472

உ

சிவமயம்.

## வண்ணைவைத்தீசர்

# ஒருதுறைக்கோவை.

(நாணிக்கண்புதைத்தல்.)

இது
வண்ணைநகர்
க. வைத்தியலிங்கபிள்ளை
செய்தது.

யாழ்ப்பாணம்
"நாவலர்" அச்சுக்கூடம்.

1913.

விலை சதம் 30.

841.6
வைத்தி


த.ப.
0472
5/-

கொழும்புத் தமிழ்ச் சங்க
நூலகத்திலிருந்து நீக்கப்பட்டது

யா
"நாவலர்" அச்சுக

1913.

ரம்



க. வைத்தியலிங்கம்.

யாழ்ப்ப

“நாவலர்” அச்சுக்

1913.

841.6
வைத்தி

உ

சிவமயம்.

வண்ணைவைத்தீசர்

# ஒருதுறைக்கோவை.

(நாணிக்கண்புதைத்தல்.)

இது

வண்ணைநகர்

க. வைத்தியலிங்கபிள்ளை

செய்தது.

0472

யாழ்ப்பாணம்

"நாவலர்" அச்சுக்கூடம்.

1913.

ம் 30.



வண்ணை வைத்திசர்.

# முகவுரை.

ஒத்தகுலமும், ஒத்தபருவமும், ஒத்தநலமும், ஒத்தகுணமுமுடையராகிய ஒரு கோமகனும் ஒரு கன்னிகையும் தத்தம் பரிவாரஞ்சூழப் புறப்பட்டுத் தெய்வச்செயலாய் ஒரு பூஞ்சோலையை யடைந்தனர். அங்கே இருவரும் தமியராய்த் தெய்வச்செயலின்வழி எதிர்ப்பட் டொருவரையொருவர் நோக்கினர். நோக்கினவளவில் இருவர்மாட்டும் கழிபெருங் காதலுண்டாவதாயிற்று. இளங்குமரன் கண்டு இவள் தெய்வமாதோவென்று ஐயுற்றுப் பின் மாநுடமகளெனத் துணிந்து, அவள் குறிப்புணர்ந்து தன்வசமின்றிக் கலந்து, பலதுறைப்பட்ட அன்பின் செய்திகளை நிகழ்த்தினன். இருவரும் ஒருவரையொருவர் காதலித்தாராயினும், பரிவாரமறியாது களவிலொழுகுவதன்றி வெளிப்படவொழுகுதலைத் தவிர்த்தனர். மெய்தொட்டுப் பயிலுவர். புனைந்துரைப்பர். இடம்பெற்றுத் தழுவுவர். தலைவன் வழிபாடு செய்வன். தலைவி மறுப்பள். தலைவன் அவள் கூட்டத்தை விரும்புவன். தலைவி மறுத்து நாணத்தாற் றனது கண்களைப் பொத்துவள். இதுவே நாணிக்கண்புதைத்தலென்னும் துறையாம்.

இத்துறைமேற் புலவர்கள் பெரும்பாலும் ஒவ்வொரு செய்யுளே பாடிப் போயினர். அமிர்தகவிராயர், தம்மாற்றான் பத்துக்கவி பாடினேனென்ன, நான் நூறு பாடுவேன் என்றார். மாற்றான் நீர் நானூறு பாடுவேன் என்றீர். அவ்வாறே பாடுகவென்ன, அவர் நானூறு பாடினதும் இத்துறையேயாம். பாரகவியாகிய அவர்க்கு அஃதரிதன்று. நம்போல்வார்க்கு அரிதினுமரிதேயாம். ஆயினும், யாமும் சில செய்ய முயல்வாமென முயன்று நூறு செய்தாம், செய்துமென்னை? ஆணிமுத்துக்குமுன் போலிமுத்தாயின. அமிர்தகவிராயரது அற்புதகவிகள் பின்னும் பெருமைபெறுமாறு எம் புன்கவிகளை வெளியிடுகின்றாம்.

**க. வைத்தியலிங்கம்.**

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

---

ஸ்ரீமாந். ராயபகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள்
கனிஷ்டரும், மாணாக்கருமாகிய

**ஸ்ரீமாந். சி. வை. சின்னப்பாபிள்ளையவர்கள்**

சொல்லியவை.

## கட்டளைக்கலித்துறை.

திருவோங் கியசெந் தமிழ்க்கா வியங்கள் சிறக்கவரு
பொருணுன்கி லின்பத் துறைக ளனேகம் புகலகநூல்
தருமாங் கவற்றினுள் ளேநாணிக் கண்புதைத் தற்குமுன்னீ
ரிருநா றமிர்த கவிராயன் கோவை யிசைத்துளனே.

ஒன்றினிற் கூறிய மற்றொன்றிற் கூறா துருபகங்க
ளன்றவன் றந்த திறத்தைக்கண் டாரு மதிவியப்ப
நன்றவை போன்ற வொருநூறு பாக்க ணவிலுவன்யா
னென்றுநல் வண்ணை வயித்தீ சுரனையுள் ளேத்திநின்றே.

சொற்சுவை யோடு பொருட்சுவை யாப்பணி தோன்றவதி
யற்புத மாக நவரூ பகங்க ளமைத்தினிதே
கற்பவ ரோடு கலைவல்ல மாந்தருங் கண்டவற்றின்
பொற்பை வியப்ப விசைத்தானிவ் வீழம் புகழ்பெறவே.

மற்றவன் யாரெனின் முன்பொரு தோத்திர மஞ்சரியாஞ்
சொற்றிறஞ் சேர்சித் திரகவி மாலை தொடுத்தருஞ்சீர்
பெற்றவன் வண்ணையிற் கந்த வனப்பிள்ளை பேசரிய
நற்றவ மைந்தன் வயித்திய லிங்கமெய்ந் நாவலனே.

*

சுத்தாத் துவித சைவ சித்தாந்தப் பிரசாரகரும்,
உதயபானு பத்திராதிபருமாகிய
நல்லூர்:

## ஸ்ரீமத்.சு. சரவணமுத்துப்பிள்ளையவர்கள்சொல்லிய
## ஆசிரியப்பா.

உலகெலா மாகிநின் றிலகுபே ரொளியாற்
றாமே யாகிய கோனே யானன
மைந்தே தாங்கிய முந்து சதாசிவ
வருவுரு வாகவவ் வுருவதிட் டித்த
வடிவென வாகம முடிவுறு தியினறை
விந்துமோ கினிமான் றந்திடு மூவகைத்
தத்துவங் கடந்த சத்துவ முத்தி
தருநேர் வழியா மருவுயர் சைவ
சுத்தாத் துவித சித்தாந் தத்து
முதற்குர வோனா நுதற்கண் பெற்றம
ரொருசீ கண்ட வுருவரு ளொருகலை
கொண்டந விறையனார் கண்டதொ ரகப்பொரு
ளாதிய பொருணூ லோதிய திறமை
பூண்டர சவைக்களத் தீண்டுபே ரறிஞர்
சிரநூ லெனத்தனி பரவிநின் றேத்த
நவின்றோர்க் கினிமை நுவன்றிடு நன்மொழி
புணர்த்தலா தியதா வுணர்த்துபத் தழகுங்
குதிகொண் டுலாவ விதிகொண் டமைத்தே
மோனை யெதுகை யேனை யணிகள்
பொருந்தமு னிரண்டடி பெருந்தகை யெனுங்கவி
நாயக னற்புக ழாயவை யனைத்து
மன்னிடச் சிறந்த பின்னிரண் டடிகளே
நிறைந்த சிலேடையொ டறைந்திடு துறையா
மண்புகழ் நாணிக் கண்புதைத் திடுதலெ
னொருதுறைக் கேகவி தருநா னூறமை
கோவைசெய் தரும்புகழ் மேவுதொல் ல்மிர்த
கவிராச னாகிய புவிராசர் போற்று



சீரியன் போலொரு நேரிய நூலைப்
பின்னா ளாகிய விந்நாள் காறும்
வனைந்திட வெவரு நினைந்திடா மையினலத்
தன்னவன் செய்திடு பின்னமி லொருதுறைக்
கோவையை மனமுற வோவிலா தாய்ந்து
சொற்சுவை பொருட்சுவை நற்சுவை தரவுயர்
சோலைசூழ் வண்ணை யாலய மமர்வயித்
தீசனை தன்கவி நேசநா யகமாத்
துதித்துநா ணிக்கண் புதைத்தலென் றுறைக்கே
பாவொரு நூறமை கோவைசெய் தனனாற்,
கோகன கஞ்செறி மாகன வாவி
சூழ்வரு வண்ணை வாழ்தரு கந்த
வனவேள் புரிதவ கனமா தவமே
வடிவெடுத் தாலெனப் படியிடை யுதித்தோன்,
கலக்கமி லாதுதொ லிலக்கியம் பலவுந்
தேர்ந்துந லறிஞரைச் சேர்ந்தெழு சங்கை
தீர்ந்திடத் தினமு மோர்ந்திடு மறிவோ,
னிருசீர்ச் செல்வமு மொருசே ரப்பெறு
நிலையினைத் தானே தலையெனப் பெற்றும்
பொறியில ரெனவறை சிறியவ ரறிஞர்க
ளெதிரக நிறுவிய முதிரெழு தலையுற
வருதலை நேரா தொருதலை யாக
வணங்கிய நடையுறு குணங்கமை யுடையோன்,
றுறந்தவர் தமக்கே சிறந்துள சுவாமி
வேடம் பூண்டே நாடெங்குந் திரிந்
தாசைமீ தாக வாசைமீக் கூர்ந்து
வாசக வலியால் யாசகஞ் செய்துங்
கூடா வொழுக்க நேடாப் பூண்டும்
மாயையின் குணங்க ளாயவை யாவுங்
குடிகொள மமதை யடிகொள மடிதரு
புலையுடல் வளர்த்தலிற் றலைமைபெற் றிழிந்த
போலி வேடரைப் போலிலா தருநிதி

முறைமையி னீட்டி மறுமையை நினைந்திங்
கில்லற மல்லது நல்லற மன்றென
ஔவையு மோதிய தாட்டி செவ்விதி னறைந்த
மூதுரை யதனைச் சாதுரை யெனக்கொண்
டில்லறத் திருந்தே பல்லற மோம்பி
யீசனைத் தன்னுளப் பூசனை கொண்டு
பொறையுடைக் கந்தயை நிறையெனப் பூண்டு
மலர்ந்த முகத்தோ டலர்ந்திடு மகத்தோன்,
கோணு தருள்பொழி பூணு கத்தோன்
மாணுர் திருவடி பூணு கத்தோன்
நெஞ்சத் துறைதரத் தஞ்சக் கரத்தோன்
வஞ்சத் துயிர்வதைக் கஞ்சக் கரத்தோ
னலங்கா ரம்பல துலங்குறச் சைவ
சாத்திரப் பொருள்செறி தோத்திர மஞ்சரி
நாத்திடம் பெறத்தனி யாத்திடு முரவோ
னாகிநே ரில்லா யோகியு முணரரு
மாதியி னல்வரு பூதியி னெழில்சேர்ந்
திலங்கு வயித்திய லிங்கவே ளனவுல
கறைந்திடு பெருங்குண நிறைந்திடு மிரும்பொரு
ளுறுங்கலை தெரிந்துய ரருங்கவி விரைந்துசெய்
திறந்தனி யமைந்துள சிறந்தபா வலனே.

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஓசைபொரு ளமைதியழ கொழியா தோங்கி
யொழுகவண்ணை வயித்தீச பதியே பாவுக்
காசைதரு நாயகமா யமைந்தே மேவ
வரியவொரு துறைக்கோவை நூறே செய்தான்
மாசைமரு வாதநெறி மனத்தோன் றென்னான்
மகிழ்ந்துபல கற்றுணர்ந்து மேலோர் பாலிற்
பூசையுறப் பொருந்தியர வணிந்தோன் றளை
போற்றுவயித் தியலிங்க புலமை யோனே.



## முழுமோனைக் கட்டளைக்கலித்துறை.

நாவலர் நாணி நயன நனிமறை நற்றுறைக்கே
நாவலர் நாளு நவிலு நயகவி நாடுசெத
மாவலர் வாவி வயன்மேவு வண்ணை வயித்யலிங்க
பாவலன் பாரிற் படிசீர் பரவப் பகர்ந்தனனே.

## உத்தமமோனைக் கட்டளைக்கலித்துறை.

அஞ்சக் கரத்தனை யாய்மலர்க் கண்கொண் டருளினனை
யஞ்சக் கரத்தினை யாரமு தாக வருந்தினனை
யஞ்சக் கரத்தனை யன்பார் வயித்தியலிங் கண்ணுறுதித்
தஞ்சக் கரத்திணை யார்க்கோர் துறைக்கவி யாற்றினனே.

## கட்டளைக்கலித்துறை.

நாகன வண்ணை வயித்தீ சனைக்கவி நாயகமா
நாகன கண்ணிணை நாணிப் புதைத்தலெ னற்றுறைக்கே
நாகன வாது நறுங்கவி நூறு நயந்தமைத்தான்
நாகன நேரு வயித்திய லிங்க நரேந்திரனே.

---

சைவப்பிரகாசவித்தியாசாலை உபாத்தியாயருள் ஒருவராகிய
**ஸ்ரீமாந். தி. கிருஷ்ணபிள்ளையவர்கள்**
சொல்லியது.

## கட்டளைக்கலித்துறை.

மதியமர் மாட நிறைவண்ணை மேவு வரதனையே
துதியம ரேர்கவி நாயக னாகநற் றாயபல
விதியம ரோர்துறைக் கோவை விரித்து விளம்பினனிப்
பதியமர் கந்த வனவே ளளித்தமெய்ப் பாவலனே.

கலைநிறை வாலிரு ணீக்குத லானுளங் காணழகின்
நலநிறை வாலிசை நல்குத லாலய னாவிருக்கும்
இலநிறை வாற்புக ழோங்கு வயித்திய லிங்கபிள்ளை
புலநிறை வாற்செ யொருதுறைக் கோவை புதுமதியே.

பொன்னலங் காரப் பணியணை யானயன் புங்கவர்செம்
பொன்னலங் காரண நாதவென் றேதொழும் புண்ணியற்கே
பொன்னலங் காக்கும் வயித்திய லிங்க புரவலன்சொற்
பொன்னலங் கார மணிமாலை யீதென்று போற்றுதுமே.

சங்கப் புலவரிற் சேர்ந்து கலந்துறை சங்கரனார்
துங்கப்பொருளகத்துள்ளியல்சொன்னாற்றுறையினென்றாய்த்
தங்கப் பெறுமோர் துறைக்கவி நூறு தனிவைத்திய
லிங்கப் புனித னிசைத்தான் புலவர்க ளின்புறவே.

---

வண்ணைநகர்

**ம. ள. ள. ஸ்ரீ. உ. நாகமுத்துப்பிள்ளையவர்கள்**

சொல்லியது.

## கட்டளைக்கலித்துறை.

சீரா ரமிர்த கவிராச னோர்ந்துமுன் செய்தமிழ்க்கீ
டேரா ரொருதுறைக் கோவையி னூறிங் கிசைத்தனன்சொற்
பேரார்நற் றோத்திர மஞ்சரி பேசிப் பெரும்புகழ்செய்
நாரார் வயித்திய லிங்க கவிஞ னயவள்ளலே.

---

தணிகைப்புராண உரையாசிரியர் அம்பிகைபாகஉபாத்தியாயர்
குமாரரும், இணுவில் ஸ்ரீபாஸ்கர ஞானோதய
சைவ கலாசாலைத் தலைமை ஆசிரியரும்,
இந்து குமாரசபைப் பிரதிஷ்டாபகரும் ஆகிய
**அ. க. வைத்தியலிங்கபிள்ளையவர்கள் சொல்லியது.**

## நேரிசையாசிரியப்பா.

திருவள ருலகத் துருவளர் கமல
மாமக ளோடு நாமகள் வாசமும்
நஞ்சணி கண்டன் செஞ்சடை நாயகன்
ஐந்து முகத்தோன் சுந்தர விடையோன்



நந்தியம் பெருமான் முந்துறு கோயிலும்
ஆனைமா முகவன் றானமர் கோயிலும்
சரவண சாதன் மருவிய கோயிலும்
நாகுல தீர்த்தமும் நாகுலா லயமும்
நாவலர் கழகமும் பாவலர் சங்கமும்
செந்தமிழ் வழக்கமும் இந்திரச் செல்வமும்
துன்னுயாழ்ப் பாண மென்னுநன் னாட்டில்
மாசறு பொன்னும் காசறு மணியும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பாசவர் வாசவர் பேசுநற் றெற்றியும்
ஓவியர் கூவியர் மேவுநல் லிருக்கையும்
பொன்வினைக் கொல்லரும் நன்வினைக் கருமரும்
கஞ்சகா ரரும் விஞ்சுதோற் றுன்னரும்
வாசஞ் செய்யும் நேசமார் நிலயமும்
பிறவு மமைந்த சிறவுறு வண்ணை
வாசவைத் தியலிங் கேசக் கடவுளைப்
பாட்டுடைத் தலைவனா நாட்டிக் கொண்டே
பெண்கொடி நாணிக் கண்புதைத் திடலெனும்
ஒருதுறைப் பொருளே பெரிதுறு வகையாய்
வீறி மருவிட நூறு செய்யுள்
சொல்லும் பொருளும் நல்லன வாக
ஆய்ந்து தொடுத்து வாய்ந்திடச் செய்தான்
வண்ணையிற் கந்த வனப்பெரு வள்ளல்
நண்ணுநற் றவமாய் நானிலத் துதித்தோன்
எழுத்துச் சொற்பொருள் யாப்பணி யைந்தும்
அழுத்தி மனத்தில் அடைவுடன் கற்றோன்
பற்பல விலக்கியம் பண்பொடு கற்று
விற்பன மாக விளங்கிய விவேகி
பாங்குறு மடக்கும் பற்பல வணியும்
தேங்குறச் செய்யுள் செய்யும் புலவன்
சிவனடி யவரைச் சிவனென மதிக்கும்
அவமிலாப் பத்தியில் அதிமுதிர் வுடையோன்
வண்டமர் குவளை மாலை புனையும்
திண்டிற லமைந்த செழும்புயா சலத்தோன்

நிறையுறு கோலென நீணில மதிக்கத்
துறைபல கற்ற தூயபே ரறிவினன்
குசைநுனி யதனினுங் கூர்மதி கொண்டு
நசையுடை யாரும் நன்பொருள் காண்போன்
யாவரும் புகழு மினிய குணத்தோன்
பாவலர்க் கென்றும் பணிவுறு மன்பன்
எண்ணு வைத்திய லிங்க
நண்ணுசெந் தமிழுணர் நற்புல வோனே.

யாழ்ப்பாணம் சைவப்பிரகாசவித்தியாசாலைத் தலைமையாசிரியர்
சுன்னுகம்
**ஸ்ரீமாந். அ. குமாரசுவாமிப்புலவரவர்கள்**
சொல்லியது.

## விருத்தம்.

நானூறு மொருதுறையாய் வருங்கோவைக் கிணையென்று
ஞாலங் கொள்ளத்
தானூறு செய்யுளொரு துறையமைய வொருகோவை
தானுந் தந்தான்
கானூறு குவளைமலர் புனைமார்பன் செந்தமிழ்சேர்
கலைகள் வல்லோன்
தேனூறு பொழில்வண்ணை நகரவயித் தியலிங்கச்
செல்வன் மாதோ.

யாழ்ப்பாணம் நாவலர்கோட்டம்
**ஸ்ரீமாந். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள்**
சொல்லியது.

## வெண்பா.

பெண்ணை யிடங்கொண்ட பெம்மான் றிருவடிக்கு
வண்ணை யிடங்கொண்ட வைத்யலிங்கன்—கண்ணைமிக
நாணிப் புதைக்கு நறுந்துறைமே னூறுகவி
பேணிப் புனைந்தான் பெரிது.

உ
சிவமயம்.

# வண்ணைவைத்தீசர்
# ஒருதுறைக்கோவை.

(நாணிக்கண்புதைத்தல்)

——:o:——

### விநாயகவணக்கம்.

### காப்பு.

சீர்மேவு மூரி விலோதனத் தான்செக மேழும்பெற்ற
வார்மேவு கொங்கை வரைக்கொடி பங்கன் வயங்குவண்ணைக்
கூர்மேவு முத்தலை வேலோற் கொருதுறைக் கோவை செப்பக்
கார்மேவு வேம்படி வேழமென் போதங் கலந்துற்றதே.

### வைத்தீசுரர்துதி.

தனந்தரு மெண்ணெண் கலைஞானந் தான்றருஞ் சாதுக்கள்சே
ரினந்தருஞ் சித்திக ளெல்லாந் தரும்புக ழீகைநிறை
மனந்தரு மின்னு முலவாச் சிவகதிவாழ்வுதரும்
வனந்தரும் வேணி வயித்தீ சுரர்திரு வார்கழலே.

### அவையடக்கு.

நல்லார் பிறர்குற்ற நாடாரென் றௌவை நவின்றதனுல்
வல்லா னமிர்த கவிராயன் கூறிய வாக்கினெதிர்
செல்லார் பொழில்வண்ணை யீசரன் மேற்கவி செய்தனன்சேய்
கல்லா மழலையென் றெள்ளா தறிஞர் களிகொள்வரே.

## நூல்.

ஆரணத் தானு மயிரா வதத்தனு மண்டர்களும்
வாரணத் தானுந் தொழும்வயித் தீசர்தம் வண்ணையன்னீர்
வாரணத் தாரைத் தெரிசித்து மீண்டனம் வண்கொடிசேர்
வாரணந் தாங்கிய வேலரைக் காண வழங்குதிரே. 1.

1. சங்கு, 2. யானை, 3. கோழி, வேலர்—கண்.

அளிமேவு கொன்றை வயித்தீசர் வாழ்வண்ணை யம்பதியில்
நெளிமேவு வார்குழ லாளே பதும நிதியதனை
வெளிமேவ வைத்திரு கண்மூடி யன்னதை விட்டிருந்தாற்
களிமேவு மைம்புலக் கள்வர்கண் டால்வம்பு காட்டுவரே. 2.

1. பதுமநிதி—தனம்.

தாயத்தை மீட்கத் தனிச்சந்து சென்றவன் றாள்வண்ணையில்
ஆயத்தை நீத்தநல் லாரணங் கேநும் மடவிதனிற்
சீயத்தை வேழத்தைப் பாந்தளைக் காட்டிச் செம்மான்மறைத்த
மாயத்தைச் சொல்ல வெளிதோ பொருட்டு மடவன்னமே 3.

1. சந்து—தூது, 2. சீயம்—இடை, 3. வேழம்—தனம், 4. பாந்தள்—கடிதடம், 5. செம்மான்—கண.

காதொரு போதுமி லாதானைக் கங்கண மாக்கியிக்காற்
காதொரு வேளைக் கடிந்தவன் சேர்வண்ணைக் காரிகையீர்
மாதொரு பாக னுறையுளைக் கண்டு மகிழ்ந்ததுபோற்
சீதர னூர்த முறையுள்கண் டாற்சுகஞ் சித்திக்குமே. 4.

1. மலை, 2. கடல்.

பாலைக் கமலங் கலந்தது மானப் பரையொடும்போய்
மாலைக் கமலனை யாள்வயித் தீசர்தம் வண்ணையன்னீர்
காலைக் கமலத்து ணீலோற்பலங்கள் கரந்துறைய
மாலைக் கமலத்தைக் காட்டிநின் றீரென்ன மாயமிதே. 5.

1. கமலம்—நீர்; 2. காலைக்கமலம்—அலர்ந்த செந்தாமரை—கை. 3. நீலோற்பலம்—கண். 4. மாலைக்கமலம்—தாமரைமுகை-தனம்.



மருவலர் தாழும் வயித்தீ சுரர்தம் வயங்குவண்ணைக்
குரவலர் சூடுங் குயிலே பெருந்தனங் கொண்டிருந்துந்
திருவிலி ராகிய லோபிகள் போலத் திருமனைமாட்
டிரவலர்க் காண்கில னென்னோ நும்மீகை யெழினலமே. 6.

1. இரவலர்—நீலோற்பலம்—யாசகர்.

அயிலைப் பழித்த விழியாள் கொழுந னணிவண்ணைமேன்
மயிலைப் பழித்த வொயிலணங் கேநும் மலர்க்கயத்தே
வெயிலைப் பழித்த வளைவள்ளை கஞ்சம் விலங்கல்கண்டேன்
புயலைப் பழித்த குவளைகண் டாற்சிந்தை பூரிக்குமே 7.

கொடிநேர் மருங்குமை பங்காளன் வெற்பைக் குனித்தவன்சேர்
படிநே ரிலாவண்ணை யன்னீர் முறிநொய்ய பஞ்சனிச்சம்
அடிநேரும் பைந்தொடி கண்மூடி நின்றிங்ங னுட்டயர்ந்தீர்
துடிநே ரிடாயினி நானும்பந் தாடத் தொடங்குவனே 8.

தாடலை மேற்கொண்டு வானோ ரிறைஞ்சுந் தனிப்பொருணின்
றாடலை மேற்கொண்ட வண்ணையன் னீர்நும் மகல்வனத்தே
காடலை மேற்கொ ளரிமாவை யும்பலைக் கண்டஞ்சியோ
ஊடலை மேற்கொண்ட மான்காந்தட் காட்டி லொளித்ததுவே. 9.

அம்பள வொத்த விழியா டலைவ னணிவண்ணையிற்
செம்பழ மொத்த விதழணங் கேதிரு மால்கரத்திற்
கம்பள வொத்த கழுத்தாய்கைத் தேனைக் கரந்தெலுமிச்
சம்பழந் தந்தனை நின்போற் கொடியவர் தாமிலையே. 10.

1. கம்பு—சங்கு, 2. தேன்—வண்டு.

சேயென்ன வந்த முனிகான் முளைதன் சிறுமைகண்டு
ஆயென்ன வந்த நமனையட் டோன்வண்ணை யஞ்சுகமே
பாய்மன்ன ரங்கை விரித்தொளித் தீர்கைக்குட் பாய்ச்சிகையை
வேயன்ன தோளிநின் காயெடுத் தேவிளை யாடுவனே. 11.

1. பாய் மன் அரங்கு.

இடியுடை யாரைப் புறங்கண்ட கூந்த லிளம்பிடிதோய்
துடியுடை யாருறை வண்ணையன் னீரிந்தத் தொல்லுலகின்
மிடியுடை யாரெனும் பார்ப்பாரத் தங்கண் மிகப்படைத்தார்
முடியுடை யார்நனி தாழ்ந்தா ரிதுவென்ன மோசங்களே. 12.

காரணி பூரணி நாரணி பங்கிற் கலந்தபைந்தார்
ஆரணி தோளர் வயித்தீசர் வாழ்வண்ணை யம்பதியில்
சீரணி நன்னுத லாளேகண் ணற்ற திருந்திழையார்
பூரணி கும்பத்தைத் தாங்கிநின் றாலும் புகழில்லையே. 13.

சின்னன்னை சேய்க்கு முடியளித் தோன்றுதி செய்யும்வண்ணை
மின்னன்ன நுண்ணிடை சாணு ருயர்ந்திட மெய்ம்மறையைத்
தென்னென்ன வோதுநற் பார்ப்பாருஞ் சக்கிலி யாய்த்திரிந்தார்
என்னென்ன மாறுத லாமோ கலியி லினியன்னமே. 14.

அனமுந் தெறுழியு மாகியம் மாலுட னாரணனும்
இனமுந் துருவி யறிவரி யான்வண்ணை யேந்திழையீர்
சினமுந்து தீய கடுவைக் கரத்துட் செறித்துநின்றீர்
மனமுந்து நீரிள நீரளித் தாலெவர் வாங்குவரே. 15.

அக்கணி கொன்றை யராப்புனைந் தோனுத லம்பகத்தான்
மக்களை யீந்தவன் வாலாம் பிகைபங்கன் வண்ணையன்னீர்
இக்கினை வென்ற ரசமா துளங்கனி யிங்கிருக்க
மிக்கசெம் மாவடு மூடிவைத் தீரிது வெள்ளறிவே. 16.

மன்னும் பதியுறை வண்ணையன் னீர்மத வேள்பகழி
தின்னுங் கொடியவெந் தாகத்தைத் தீரென்று செவ்விளநீர்
இன்னும் மனம்பொருந் தாமற்கண் மூடிநின் றேயளித்தீர்
முன்னுமெப் போதுங் கொடுத்தறி யீர்கொன் முறையல்லவே. 17

சிலையின்றி நின்றவ னேடுமற் போரினைச் செய்தவன்சேர்
கலையொன்றி னார்புகழ் வண்ணையன் னீர்கரிக் கன்றொடுவாள்
மலையொன்று சீயக் குருளைவிட் டேகுற மாதெனுநீர்
வலையின்றி மீன்படுத் தீருமைப் போலெவர் வல்லவரே. 18.



தடியென மான்முது கென்பினைத் தாங்கிய சாமியின்றே
குடியென நஞ்சைக்கொடுத்தவன் போல்வண்ணைக்கோதைநல்லீர்
இடியென வாரும் பயந்தேது மாலத்தை யேந்திநின்றீர்
துடியென னேரிடை நீரோநல் லாலல சுந்தரோ. 19.

சிகரா லயத்தொடு கல்விக் கழகஞ் செறிந்தவண்ணை
அகரா னுலர்த்திடுங் கூந்தனல் லீரரும் பாணிதன்னைப்
பகராருங் கும்பத்திற் சேராமல் யாரும் பருகலற்ற
மகரா லயந்தனிற் சேர்த்தீ ரிதுநும் மௌட்டிகமே. 20.

மத்த மெருக்கு மதியணி வோர்வயித் தீசர்வண்ணைப்
புத்தமு தொத்த குதலைநல் லாயிது பொய்யன்றுகேள்
கொத்தடை யாலின தும்பரிற் கோங்கின் முகைகுலவ
அத்தியி லம்புயம் வாய்த்தது காணிஃ தற்புதமே. 21.

மிடலைப் பெறுமசு ராதிபர் மேவும் புரங்கள்வெந்தங்
கடலைப் பொடியெழ நக்கா னுறையு மணிவண்ணைசேர்
மடலைப் பொருவு குழலீர் பொதிய வரைவிடுத்துக்
கடலைத் தடங்கையி லேந்திய தாலக் கடமுனியே. 22.

மாணிக்கு மாறன் பொருளளித் தோன்வயித் தீசர்வண்ணை
ஆணிக் கிணங்கிய பொன்னையொப் பீரரும் பம்பரத்தைப்
பேணிக் கொளென்றிங் கெனக்களித் தீர்மதன் பெற்றவில்லின்
நாணியுந் தந்திடி னொட்டி யும்மை நயப்பிப்பனே. 23.

1. மாணி—பிரமசாரியாகியதருமி.

அலையாழி வந்த கடுவையுண் டோன்வண்ணை யம்பது...
மலையாளி போற்று மயிலை யுனது மதியென்னைபோ
சிலையாளி வம்பருக் கீத லடாதென்று செய்யவத்தங்
கொலையாளி தங்களுக் கீந்ததென் னேவெழிற் கோகிலமே. 24.

மலையாளி—மலையரசன்.

பரத்தினை நோக்கிய மெய்யடி யார்கள் பணியும்வண்ணைச்
சரத்தினை நேர்விழி மாதேமுன் சர்ப்ப சயனத்தொடு

வாத்தினை நல்கு கமலைகண் டேனினி வாமகண்ணா
புரத்தினைக் கூட லொடுகாட்டி னுற்பெறும் புண்ணியமே. 25

பூவையை வென்ற மொழியாள் கொழுநன் புகழ்வண்ணையிற்
காவியை வென்ற விழியீர் கரிமுகன் கார்வண்ணர் தாட்
சேவையை நோக்கிக் கமலனை நாடித் தெளிந்து நின்றேன்
பாவையைச் சேர்ந்தவர் தாமே வெளிப்படிற் பாக்கியமே. 26.

வரைக்குலந் தாழச் சிறகரிந் தோன்றுதி வண்ணைதன்னின்
மரைக்குலத் தோடு மதியமு நாணும் வதன மின்னே
தரைக்குண் மகோததி யாத்திரை சாருஞ் சமயத்துந்து
திரைக்கட லாழியர்க் குட்பட மேருத் தெரிகின்றதே. 27

உதியைப் புரையு முழுநாத் திகரென்று மோர்ந்தறியா
விதியைத் தடிந்த விரிசடை யோன்வண்ணை வெற்பணங்கே
நிதியைத் தருந்திக ழம்போ ருகங்க ணெகிழ்ந்தனமேன்
மதியைத் தருஞ்சசி நீங்குமுன் மீன மறைந்ததுவே. 28.

அகரத்தை மேவு வயித்தீசர் நண்ணுமணி வண்ணைசேர்
தகரத்தை மேவு குழலீர் பலதுறை சாற்றநின்ற
மகரத்தை மேவு கடலற் றுயர்ந்த வரைபடைத்தீர்
சிகரத்தை நீத்த சிகண்டியென் றேயுமைச் செப்புவரே. 29.

கண்டி—கண்டிநகர்.

சோனையை நீக்கு வரையெடுத் தானத் துரோபதிதன்
றானையைக் காத்த திருமால் பணிவண்ணைத் தண்டலையின்
மானையுந் தாக்கு விழியீர்க ணுர்த்துநும் மார்பிலிரண்
டானையைத் தாங்கிநின் றீரெவர்க் கேனு மரிதென்னவே 30.

குலப்பதி வேட்டுவன் கண்ணணி நாதன் குறைவில்வண்ணை
அலப்பறு வேல்விழி யாளே யிறையவ னாளித்த
உலப்பறு காவியத் தோடுநின் றீரிஃ துண்மையினிச்
சிலப்பதி காரத்தைப் பார்ப்பேனெப் போதுஞ் சிறுநுதலே. 31



நடுப்படு பொய்யெனும் வாலாம் பிகைபங்க னண்ணும்வண்ணை
மடுப்படு சேல்விழி மாதே யிரங்கியிம் மாரனம்பு
வடுப்படு புண்ணினை மாற்றச்சஞ் சீவி வரையளித்தீர்
கடுப்பொடு பாயுஞ் சரத்தையு நீக்குதல் காருண்யமே. 32.

கொம்பட்ட பூட்கைக் குழவியை யீந்தவன் கோலவண்ணைக்
கம்பட்டகண்டக் கனங்குழை யீர்கருங் குஞ்சியெறி
அம்பட்ட ரோடுகைக் கோளருங் கூடியடங்கிவிட
வம்பட்ட துட்ட ரடங்கா திடையரை வாட்டினரே. 33

அம்பு அட்டர்—அம்பைவென்ற கண்கள்.
வம்பு—கச்சை. கம்பு—சங்கு.

விண்டொட் டுயர்ந்து பலியேற்ற விண்டு விரும்புவண்ணை
மண்டொட் டெடுத்த மடந்தையன் னாயிம் மகிதலத்தே
திண்டொட்ட தோள வுனையே வதுவைசெய் வேனென்றுநீ
கண்டொட்டுத திண்ணமி தென்றனை போலுங் கயற்கண்ணியே.

சுதனு லமரர் கலிதொலைத் தோன்வண்ணைத் தோகையன்னீர்
மதனு லயர்ந்து வரையேறித் தேனுண்ண வந்துநின்றேன்
எதனுற்கண் ணேணி யெடுத்தொளித் தீர்சற் றிரக்கமின்றி
இதனுலும் வம்பரென் றேயுல கோருமை யேசுவரே. 35

கவசத்தை யாதித்தன் கான்முளை பாற்கவர்ந் தோன்பணியுஞ்
சிவசத்தர் வாழ்வண்ணை யன்னீர் மதன்றிரு வோலக்கஞ்சேர்
திவசத்திற் கந்தி நிறைகுடம் வாழை திகழவைத்துத்
துவசத்தை மேலுயர்த் தாதொளித் தீரிது சூதென்னவே. 36

துவசம்—மீன்—கண்.

குடக்கோடு வானெயி றட்டா னுறையுங் குளிர்வண்ணைசேர்
மடக்கோடு வெண்பிறை வாணுத லாய்வடி வேலனமர்
வடக்கோடு வேங்கட வெற்பினைக் காட்டியவ் வைகைசென்று
கடற்கோடு தீரத்தைக் காட்டாது விட்ட கருத்தென்னையே. 37

ஆனை யடர்த்த வயித்தீசர் வைகு மணிகொள்வண்ணை
மானை யடர்த்த விழியேயுன் னன்பின் மயங்கிவிழிப்

பானை யணைத்துப் பருகுதற் கேமுலைப் பாலினொடு
தேனை யவிழ்த்துக் கொடுத்தாற் சுகம்வந்து சேர்ந்திடுமே. 38

அங்கம லத்தயன் பூசிதந் நாத னமர்வண்ணைசேர்
செங்கம லத்துறை மானேயுன் னோடமர் செய்குநர்பாற்
பங்கமி லத்தனு வாண்மறைத் தாரையும் பாய்ந்துகுத்துஞ்
சங்கிலி தொட்டவெவ் வேழமுய்த் தீரென்ன தந்திரமே. 39

ஆன்வேட் டுகைத்த வயித்தீ சுரர்த மணிவண்ணையிற்
கான்வேட்டு மேவுங் கருங்குழ லீருங்கள் காட்டகத்தே
மான்வேட்டை யாடிட வந்தே னவைமறைந் திட்டபின்னர்க்
கூன்வேட்ட நன்னுத லாய்மத யானை குறுக்கிட்டதே 40

மலைகண்டு கொண்ட தெனுமால் விடைவயித் தீசர்வண்ணை
யலைகண் டுதித்தநல் லாரணங் கேயவ் வமணர்சைவ
நிலைகண்டு நின்றவெம் மப்பரைச் சேர்த்து நெறிபிணித்த
சிலைகண்டு கொண்டனன் காணே னமிழ்த்துந் திரைகடலே. 41

கந்தத்தை யார்ந்த கடுக்கையந் தாரன் கவின்கொள்வண்ணைச்
செந்தத்தை யொத்த சிலைநுத லேதிரைப் பாலொதுங்கும்
நந்தத்தை யோம்பிய வேலையை நாடி நலித்ததுபோல்
விந்தத் தையுமடக் காதிருந் தால்வம்பு மேவிடுமே. 42

குடியையு மன்பர் மிடியையுங் காத்த குழகர்வண்ணைப்
படியையும் வென்ற பொறையணங் கேமதன் பாணியுற்ற [ன்
கொடியையுங்கைக்கொண்டுகோலத்தைவீட்டிக்குறைத்ததுபோ
முடியையும் பங்க முறுவித்து வாகை முடிக்குதிரே. 43

மடங்கொண்டு பாதகஞ் செய்திடு பாவிக்கும் வாழ்வளித்த
விடங்கொண்டு காத்தவன் வண்ணையன் னீர்கண் விலங்கலின்றிக்
குடங்கொண்டு பாந்தளை யாட்டுவர் பாப்புக் குறவரிரு
குடங்கொண்டு கண்கட்டி யாட்டிநின் றீருங் குறிப்பென்னையே.

அணையின்றி நின்ற கடலா மெனக்க ணருவிபொங்க
இணையின்றி நின்றமெய் யன்பர்கள் சூழ்வண்ணையேந்திழையே



துணையின்றி நின்ற விளைஞர்தம் மாவியைச் சூறைகொள்ளக்
கணையின்றி யானைப் படையோடு நின்ற கருத்தென்னையே. 45

மலையிலி யாகு முமையா டலைவன் மகிழ்வண்ணையில்
அலையிலி யாகு மணங்கையொத் தீரழ கார்மதன்போல்
இலையிலை யென்னு மிடையீர் தனங்க ளிருக்கவுநீர்
கலையிலை யென்னு நிலையீ ரிதுநுங் கலைமதியே. 46

நாகத்தை யேய்ந்த வயித்தீசர் மேவு நலன்கொள்வண்ணை
நாகத்தை யேய்ந்த நடுவுடை யீர்நறை யோங்குசெய்ய
நாகத்தை யேய்ந்த புலியா லொளித்துமை நாகமன்ன
நாகத்தை யேய்ந்துநின் றீரெவர்க் காமிது நன்னுதலே. 47

2. நாகம்—ஆகாயம். 3. நாகம்—வஸ்திரம்—கலை—கண்.

வரையெடுத் தூதிய மாயோன் பணிவண்ணை மாநகரில்
வரையெடுத் தான்ற வகடுடை யீரொளி மன்னிமய
வரையெடுத் தார்நல் வரையெடுத் தாரென்ன வம்புகர
வரையெடுத் தாரையும் வாட்டிநின் றீர்வெய்ய வாண்மதியே.

இமயவர்—கண். வரையெடுத்தார்—கை. \வரை—ரேகை.
இமை—கண்ணிமை.

மாலை யொளித்தவை வேல்விழி பங்கர் மருவுவண்ணைப்
பாலை யொளித்த மொழியணங் கேபணி காட்டிநெடுங்
கோலை யொளித்து மலையேந்தி யாலொடுங் கூடியெழிற்
சேலை யொளித்தத னாலுமை மாலென்று செப்புவரே. 49

கோல்—அம்பு—கண்.

சீதர னாற்றுந் தவத்தா லயற்குத் திகழ்மதனைச்
சோதர னயளித் தான்வண்ணை யீர்வெண் டொடையிடப
கேதன னார்வையத் தாழியை நாடிக் கிளர்கலியோ
மாதவ னார்பன்னி யாசனத் தோடி மறைந்ததுவே. 50

அல்லாரை யொத்த களத்தா னமரு மணிவண்ணைசேர்
செல்லாரை யொத்த கருங்குழ லீருங்கள் செய்கையென்னோ

வல்லாரை யொத்தபொற் கல்லாரை விட்டு மருவுநவ்விப்
பொல்லாரைக் கைய ரொடுசெற்த் திரிது பொற்பல்லவே. 51

அத்தியை மானுந் திருமேனி யானய னண்டரரி
அத்தியை யாகத் தணிவோ னமர்வண்ணை யன்னமின்னே
அத்தியைக் காதிட விட்டெறி யோத மரற்றியுந்தும்
அத்தியைத் தாமரை தோயவைத் தீர்நும் மறிவின்மையே. 52

அத்தி—அத்தீ. அத்தி—என்பு. அத்தி—யானை. அத்தி—கடல்.

தம்பத்தைக் கீண்டு கனகன்ற னாருயிர் சாய்த்தரக்கன்
கம்பத்தை யட்ட திருமால் பணிந்து கலந்தவண்ணை
விம்பத்தை யொத்த வடிவீர்விண் ராசிசெல் வீதியினிற்
கும்பத்தைக் கண்டனன் காணேனம் மீனத்தைக் கோல்வளை

கம்—தலை.

வகரத்தைக் காட்டி யுலகருள் வோர்வயித் தீசர்வண்ணை
நகரத்தைக் காட்டு மெழிலீ ருலகை நலிக்குமிரு
சிகரத்தைக் காட்டிக் கொடுப்போ ருடன்வழி சென்றநின்ற
மகரத்தைக் காட்டி லளிப்பே னுலப்பற்ற வந்தனமே. 54

பூமனைக் காமனைச் சாமனைத் தந்தவன் போற்றுமன்னை
மாமனைக் காய்ந்த திருமால் பணிவண்ணை மாதரசே
ஏமனைக் காரியை யீந்தவன் மேல்வரை யெய்தியபின்
சோமனைக் கண்டுவெண் டம்போரு கத்துட் டுயின்றதுவே. 55

நாளத்தைக் கண்ட பதுமா சனனை நலித்துவெய்ய
காளத்தைக் கண்டத் தடக்கிய சோதி கவின்கொள்வண்ணைத்
தாளத்தைக் கண்ட தனத்தீ ரெம்மோடு தருக்குசக்ர
வாளத்தைக் கண்டனன் காணேன் புறக்கடல் வைப்பினையே.

வண்டுட னுற்ற மதவேளைக் காய்ந்தவன் வாழ்வண்ணையில்
வண்டுட னுற்ற மடவனமே மரை கூம்பிடவெண்
வண்டுட னுற்றசெங் காந்தளம் போதின் மறைந்தநெடு
வண்டுட னுற்ற நிலையினை யாரும் வகுக்கரிதே. 57



தேனினி தாருங் கடுக்கையந் தாரன் றிருவண்ணைநந்
தேனினி யென்னுங் களத்தீ ருமைத்தெளி யேனிருபந்
தேனினி நீரளித் தாலுங் கொளேன்றிரு வேமறைசெந்
தேனினி நீர்தரி னானொரு போதுந் திகைக்கிலனே. 58

திலசத்தை யொத்துயிர் தோறுஞ் செறிவயித் தீசர்வண்ணைச்
சலசத்தை யொத்த தடவிழி யீரென்ன தந்திரமோ
பலசத்தை வைத்த பயவார் கலியிற் படியமிர்த
கலசத்தை யேந்தி மறைத்தீர் கருங்கடற் காளத்தையே. 59

ஆலங்கைக் கொண்ட வயித்தீசர் வாழ்வண்ணை யம்பதியில்
ஏலங்கைக் கொண்ட குழலீர் சினந்திறு மாந்துநிற்குந்
தாலங்கைக் கொண்ட கயத்தையெம் மோடு தகையவிட்டுச்
சாலங்கைக் கொண்டு நின்றீரிது வோவுங்க டண்ணளியே. 60

சாலம்—வலை—கண்.

சாதனங் காட்டிமெய்த் தாசனை யாண்டவன் றாங்குவிடைக்
கேதனங் காட்டிய வண்ணையன் னீர்கிள ராரமிர்த
ஓதனங் காட்டிய மாயனென் றோத வுயர்ந்த கந்த
மாதனங் காட்டிக் கடலடைத் தீர்வெய்ய வாட்கண்ணியே. 61

அஞ்சினி லொன்றென நின்றான் றிருவண்ணை யம்பதியில்
அஞ்சினி லொன்றென நேரிடை யாயட லோங்கநின்ற
அஞ்சினி லொன்றத னால்வலி தாழ மவரைவிட்டு
அஞ்சினி லொன்றை மறைத்தா யுனக்கிங் கருளிலையே. 62

1. அஞ்சினில் ஒன்று—அக்கினி. 2. ஆகாயம். 3. வாயு
4. அப்பு—கண்.

எல்லூரும் வெள்ளி வரையுடை யார்வயித் தீசர்வண்ணைச்
செல்லூருங் கூந்தற் றிருவனை யீர்நுந் தெளிவெண்ணையோ
வல்லூ ரெனுமுங்க ணல்லூரை விட்டு மடவியர்போல்
வில்லூரின் கீழ்வைகு மல்லூரைக் கோடல் விழல்விழலே. 63

மண்டொடு மேன மறியா னுறைவண்ணை மாநகரிற்
கண்டொடு தேன்கலந் தன்னசொல் லீர்கலங் காதநிலைத்
தண்டொடு ராவணன் ருக்கவந் தேற்கமெய்த் தாரைவிட்டுத்
திண்டொடு மாவனை தாங்கிநின் றீர்கதிர் சேயென்னவே. 64

அவரவ ராற்று வினைக்கேற்ப வாழ்வின்ன லாய்ந்துதவிச்
சிவரச மேவ வருள்வயித் தீசர் திருவண்ணையீர்
தவரசஞ் சேரைவர் மானுறை காட்டிற் றனித்துவைகக்
கவுரவர் மிக்க தனம்படைத் தேவிறல் காட்டினரே. 65

வாகன மாக விடையுகைத் தோர்வண்ணை மாநகரில்
வாகன மென்ன வருங்குழ லீர்வளி யூர்ந்துவரும்
வாகன மோடி மறையவை வேற்கரன் மாதுலனூர்
வாகனம் வந்து வழிமீ தெதிர்ந்து மறித்ததுவே. 66

2. வாகனம்—வாவுகனம்—கனம்—மேகம்.

தேர்ப்பாக னாகிய மாயோன்கண் சாத்தத் திருவருளால்
வேர்ப்பாரை நூறத் திகிரிதந் தோன்வண்ணை வெற்பணங்கே
தார்ப்பாயும் வாழை கமுகோடு கும்பங்க டாநிரைத்தும்
பார்ப்பா ரிகந்து மணவினை வேட்டல் பயனில்லையே. 67

சருமத்தை யார்த்த வயித்தீசர் சார்வண்ணைத் தண்டலையிற்
பெருமத்தை யொத்த தனத்தீரும் மோடன்பு பேணியொரு
கருமத்தை நாடி வரநீ ரருள்விழி காட்டலின்றி
மருமத்தைத் தாக்கு மவரையுய்த் தீரிது வன்கண்மையே. 68

சாமியுன் கண்ணரு டாவென்று வேண்டுஞ் சசிக்கிரங்கி
வாமியும் பங்குற வாண்டவன் சேர்வண்ணை மாமயிலே
பூமியும் வானமு மோம்புசெவ் வேடன் பொருபடையை
மாமியின் மாளிகை முன்னோடிச் சென்று மடுத்ததுவே. 69

ஒருமக வாகிய சேயையட் டேயெமக் கூனுகரப்
பெருமக னேபுளி யென்று னமர்வண்ணைப் பெய்வளையீர்
இருமக நாதன் மழைதாங் கியகுடை யீண்டுவைகத்
திருமக டாய்தன் சுதைமகன் வீட்டினைச் சேர்ந்தனளே. 70

திருமகள்தாய்—பாற்கடல், சுதை—மகள்—மகன்—
பிரமன்—வீடு—தாமரை.

பொன்னைப் படைத்த வமைச்சிய லான்றினம் போற்றுவண்ணை
பொன்னைப் படைத்த படிவநல் லீர்சிவன் போரிழைக்கும்
பொன்னைப் படைத்த தனுநீத்து மார்பினிற் போந்துவைகப்
பொன்னைப் படைத்தவ னில்லொளித் தீர்மலைப் பொற்கொடியே.

1. பொன்—வியாழன். 2. அழகு. 3. மேரு. 4. இலக்குமி.

பாவளித் தார்தமக் காளாகி மேவு பரன்வண்ணையிற்
காவளித் தார்தம் மனையையொப் பீர்கத மோங்குமத
மாவளித் தீர்மதன் வின்னாணி யாகு மலர்க்கரஞ்சேர்
ஏவளித் தாலதை வீக்கியுய்த் தேயின்ப மெய்துவனே. 72

ஆழிகொண் டான்பணி வண்ணையன் னீரடற் பானுவெனும்
ஆழிகொண் டார்மணி யாவுறை மார்பனுக் கப்பர்மதி
ஆழிகொண் டார்வையன் சேர்பதி நீக்கி யமரினுந்தும்
ஆழிகொண் டான்சுதன் பேரிகை மூட வடங்கினதே. 73

பேரி—முரசு. கை—கரம்.

சிலைய ரகத்தி னுதித்தமின் மாதுலன் சேர்வண்ணையின்
மலைய ரகத்தி னுதித்தநல் லீர்வனை மட்கலஞ்செய்
விலைய ரகத்தி னுறையாம லைவர் விரிகடலார்
வலைய ரகத்தி னுறைந்தா ரிஃதென்ன மாறுதலே. 74

மறைத்தாடி னார்வயித் தீசுரர் சேர்வண்ணை மாநகரின்
மறைத்தாடி னாரெனு நுண்ணிடை யீருங்கள் மாயமென்னோ
மறைத்தாடி னார்பந்து செப்பாடு வித்தையில் வல்லவர்மான்
மறைத்தாடி னீருமைப் போலே யெவர்வித்தை வல்லுநரே. 75

தும்பி யலமரு கொன்றையந் தாரன் சுரர்வெருவி
வெம்பி யரற்றக் கடுநுகர்ந் தோன்வண்ணை வெற்பணங்கே

தம்பி தடுக்கத் தலைவிசொற் கேட்டுத் தனிநடந்தோன்
அம்பின் மடிந்தவ ரைவரைக் கூடி யடங்கினரே. 76

காமர மேவு மொழியா டலைவன் கலந்தவண்ணை
மாமர மேவிய கோகில மேமதம் வாங்கினின்ற
சாமர மேறு மதகளி றோடரி தாவுறநீர்
தோமர மெங்கொளித் தீரிது வோவுங்க டோள்வலியே. 77

தோமரம்—கைவேல்.

கன்னரை மானு மிருபான் புயங்கொண்ட கள்வனைமுன்
மின்னிரை யென்ன வெயிறுகத் தாள்கொடு வீழ்த்தியட்ட
பொன்னிரை வேணி வயித்தீசர் வண்ணைப் புணர்முலையீர்
பன்னிரு கண்படைத் தீருமை வேளென்று பன்னுவரே. 78

பன்னிருகண்—நகக்கண் பத்தும் கண்ணிரண்டும்.

அத்திர நேர்விழி யாளுமை பங்க னணிகொள்வண்ணைச்
சித்திரை யுற்ற மதிமுகத் தீர்தென் னனையருந்தி
மெத்திய தாக நசைதீர்த்து வைக விரும்பியுற்றேன்
சத்திரஞ் சாத்திவிட் டீரிது வோவுங்கள் சற்குணமே. 79

சத்திரம்—கண்.

ஈழ வரைச்சிலை யார்வயித் தீச ரியைந்தவண்ணைக்
காழ முகிற்குல நேரோதி முன்கஞ் சனைமறைத்துச்
சூழ மதகரி காப்பில்வைத் தீரைவர் தூதுவன்போல்
வேழ மருப்பிறுத் தும்மோ டமர்செய வேண்டுவனே. 80

வஞ்சப் புலப்பகை வென்றோ ரிறைஞ்சிய வண்ணைதனின்
மஞ்சப் பெருங்குழன் மங்கைநல் லாயுயர் வானுறைவோர்
தஞ்சம் பெறாது வழிதடு மாறத் தகைந்தகிர
வுஞ்சம் பிளக்குமுன் மாவேலை முற்ற வொளித்ததுவே. 81

அம்பி யுதைத்திடு வேடனென் னுமை லருகினுற்றோர்க்
கெம்பி யிவனென் றிசைத்தோன் பணிவண்ணை யேந்திழையீர்



பம்பி மருவு மிகுழைய ரோடயர் பந்திகந்து
தும்பி படுத்து விளையாடி னீரிது தூய்மையன்றே. 82

தண்டைப் பதாம்புயப் பாரதி தோயுந் தனிமறையோன்
பண்டைப் பொழுதி னனமாகி நேடும் பரன்வண்ணைசேர்
கண்டைப் பொருவு மொழியீர் சகோரத்தைக் கைவிட்டுமேல்
வண்டைக் கரத்தணைத் தீரிது வோவுங்கள் வாலறிவே. 83

சிறுவிதி மாமகஞ் செற்றோ னமருந் திருவண்ணையிற்
பெறுநகை பூத்த வதனமின் னேநும் பெருமையென்னே
தறுகண ராகுங் குறுநில மன்னர் தலையெடுக்க
மறுவில ராகிய கோவேந்த ரஞ்சி மறைந்தனரே. 84

செத்துப் பிறக்கும் பசுவினைத் தெய்வ மெனுஞ்சிதடர்
சித்தப் பிரமை கொளமுனி சேய்க்கருள் செய்தவன்சேர்
பத்துத் திசைபுகழ் வண்ணையன் னீர்தனத் தைப்படைத்தும்
நித்தலுங் கண்பிசைந் துற்றீ ருமது நிலையென்னையே. 85

வேளைக் கொடியவெங் கூற்றினை வேழத்தை வீட்டியுமை
யாளைக் கடைக்கணித் தாண்டவன் சேர்வண்ணை யன்னமின்னே
காளைக் களிறென்ன முன்கறுத் தார்தமைக் கைவிட்டுநீர்
வாளைக் கைக்கொண்டுநின் றீருமக் கீது மரபல்லவே. 86

மாதக லாரமுன் மல்லாகத் தார்வயித் தீசர்வண்ணைக்
காதக லாவடி வேல்விழி யாயென்ன காரணமோ
சாதக லாவுடு வில்லாரக் கைதடி சார்ந்தொளித்தார்
சூதக லாவல்லு வெட்டியர் தாந்தும்பை சூடினரே. 87

காலியைக் காட்டிய காகுத்த னேத்து கழலர்சசி
தாலியைக் காட்டிய சேந்தனை யீந்தவன் சார்வண்ணையாய்
ஆலியைக் காட்டிரு கஞ்சத் தரும்புகொ ளாக்கங்கண்டேன்
நீலியைக் காட்டுதி வெற்பணங் காமெனு நேரிழையே. 88

ஆடுடை யார்தந்தை யாட்டுடை யார்வண்ணை யாதிகொன்றை
யேடுடை யாரன்ப ரேடுடையா ரெறிகா லெதிரே

வாடுடை யீர்நும் மதகரிப் போர்கண்டு வந்தனம்வெங்
காடுடை மேவு கலைப்போ னையுமினிக் காட்டுதிரே 89

கரசிலை கொண்டு விதிசுதன் வேள்வி கலக்கியவன்
சிரசிலை யென்றிடக் காதிய நாதன் றிருவண்ணையீர்
வரசிலை கொண்டு மதித்தீரென் னுள்ள மறிகடலை
அரசிலை யென்னநின் றீரிது வோவுங்க ளாளுகையே. 90

அரசு—கோ—கண்.

கொடியாருக் கம்பக மொன்றளித் தோன்றங்கை கோலவரைக்
கொடியாரை வாமத் திருத்திய நாதன் குளிர்வண்ணையீர்
கொடியாரை யொத்த முடியாரை விட்டத்தங் கோளரவக்
கொடியாரை நட்டவன் றந்தைநட் பாளனைக் கூடியதே. 91

நீளரைக் கூவிளஞ் சூடியெஞ் ஞான்று நிருத்தமயர்
தாளரைக் காட்டுந் தனிவண்ணை யீர்கடல் சார்ந்தவண்ணக்
கோளரை வெண்மருப் பானையுள் ளானைக் குறுகினன்மா
காளரைக் காணி லுலவாத வின்பங் கலந்திடுமே. 92

உலகணி வைத்த வயித்தீசர் வாழு முயர்வண்ணைசேர்
இலகணி வைத்த முலையணங் கேயுங்க ளில்லமதில்
அலகணி வைத்த கலசநற் றாண மமைத்தொளிசேர்
பலகணி வைத்தில ரீதென்ன சூது படாமுலையே. 93

அஞ்ச முதித்த நடையா டலைவ னணிவண்ணைசேர்
கஞ்ச முதித்த தெனுங்கரத் தாய்முன் கடல்கடைந்த
மஞ்ச முதித்தநன் மத்தொடு தாழியை வைத்திருந்தும்
நஞ்ச முதித்திட வில்லையென் றுலெவர் நம்புவரே. 94

அவிகைய ராகிய வந்தணு ரேத்த வலங்கறிகழ்
சிவிகைய ராகி விழாவயர் நாதர் திருவண்ணையீர்
குவிகைய ராகிச் சரோருகர் வைகக் கொடியமதன்
கவிகைய ராக முறைநீலங் கஞ்சங் கரந்ததுவே. 95



தன்க ணிலான்சுத னுந்திய கேழலைச் சாடிநரன்
வென்க ணிலாதுற வேற்றே னமர்வண்ணை மெல்லியலே
புன்க ணிலாநல் வரைமருந் தீந்து புதுநறவை
வன்க ணிலாவுற வீயா தொளித்தது வண்மையன்றே. 96

சூனுவின் பாலக் குடிலையை யாய்ந்தவன் றேய்ந்தவண்ணைத்
தேனுவின் பாலன வாய்மொழி யோடு திகழலவன்
சானுவின் பாலன மின்னே குணவரை தன்னைக்கண்டு
பானுவின் பாலகன் சேய்மாலை கஞ்சம் படிந்ததுவே. 97

மாலொளித் தானட லோராழி வையனை மாதவன்பெண்
பாலொளித் தான்சென்னி பத்துடை யானைவர் பத்தினிமார்
சூலொழித் தானயத் தாமா நல்வண்ணையிற் றாமொழிகை
வேலொளித் தாய்மத வேளையெவ் வாறினி வெல்லுதுமே. 98

கருமானை நூறித் தைத்தியர் மூவெயில் காய்ந்துவரை
தருமானை மேவு பரன்வண்ணை யீரன்று தாசரதி
ஒருமானைப் பற்ற வியலாது கோறின னேங்கியுகழ்
இருமானைக் கைப்படுத் தீருமக் காரிணை யிந்நிலத்தே. 99

கரியாரைத் தாக்கி யடக்கிய நாதன் கருதுமறைப்
பரியாரை யுய்த்த பரன்வண்ணை யீர்பய னுற்றபத்ர
கிரியாரைக் கண்டனன் முந்நீர் கையுற்றுக் கிளர்பட்டினப்
பெரியாரைக் கண்டிடி லோவாத வின்பம் பிறங்கிடுமே. 100

வாழிய வந்தண ரானிரை மேலுயர் வானிமையோர்
வாழிய சாலிய ளூர்நிறை மாமழை மன்னிறையோர்
வாழிய வண்ணை வயித்தீசர் தாளக்க மாலையொடு
வாழிய பூதி யடியார் குழாநிதம் வாழியவே.

கொழும்புத் தமிழ்ச் சங்க
நூலகத்திலிருந்து நீக்கப்பட்டது